1986 மே 13]

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றன.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு கடன் நிவாரண (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 25/1986) நிறைவேற்றப் பெற வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப் பெற்றது.

(ஏஏ) மோட்டார் வண்டிகள் வரிவிதிப்பு (திருத்த) சட்டமுன்வடிவு 1986

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

'' தமிழ்நாடு 1986 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரி விதிப்பு (திருத்த) சட்டமுன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 40/1986) *ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்.''

திரு. ஈ. வே. கி. ச. இளங்கோவன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கே போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கிற இந்த சட்டமுன்வடிவை நான் ஆதரித்தாலும் அதிலே ஒன்றிரண்டு கருத்துக்களை நான் கூற விரும்புகிறேன். இதன் காரண நோக்க விளக்கத்திலே அந்தத் தனியார் சிறப்பு பேருந்துகள் எனப்படும் ஆம்னி பஸ்களைப் பற்றி குறிப்பிட்டிருக்கிறார்கள். சுற்றுலா பயணிகளை ஏற்றிச் செல்வதற்காகத்தான் இந்தப் பேருந்துகளுக்கு அனுமதி வழங்கப்பட்டாலும் கூட, அவை சுற்றுலா பயணிகள் மட்டுமே ஏறிச் செல்கிற பேருந்துகளாக இல்லாமல் வழக்கமான பயணிகள் செல்கிற பேருந்துகளாகத் தான் அவைகள் தற்போது இருக்கின்றன.

அதை ஒழுங்கு படுத்துவதற்கும், தவறாக அந்தப் பேருந்துகளை உபயோகிப்பவர்களைத் தண்டிக்கிற வகையிலும் இங்கே பல கருத்துக்கள் கூறப்பட்டிருக்கின்றன. அதிலே முக்கியமான கருத்தை இங்கே தெரிவிக்க விரும்புகிறேன்.

---

* 1986 ஆம் ஆண்டு மே 10 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

[1986 மே 13 (திரு. ஈ.வே.கி.ச. இளங்கோவன்)

ஆம்னி பஸ்களைப் பொறுத்தவரையில் எதற்காக அவர்களுக்கு பெர்மிட் வழங்கப்பட்டதோ அந்தக் காரணத்திற்காக அவர்கள் பயன்படுத்தவில்லை என்ற குறையிருந்தாலும் கூட அதைவிட மோசமான நிலைமை இன்றைக்கு இருக்கிறது. குறிப்பாக போலி பெர்மிட்டுகளை, போர்ஜ்ட் டாக்குமெண்ட்சை வைத்துக் கொண்டு அவர்கள் இந்தப் பேருந்துகளை ஓட்டிக் கொண்டிருக்கிறார்கள். குறிப்பாக மிசோரம், மணிப்பூர் போன்ற பகுதிகளில் மத்திய அரசு 25 பேருந்துகளுக்குத்தான் ஆம்னி பஸ்களுக்கான பெர்மிட்டை வழங்கியிருக்கிறார்கள். அப்படி மணிப்பூர், மிசோரம் போன்ற பகுதிகளில் வழங்கப்பட்டதாக போலி பெர்மிட்டுகளை, நூற்றுக்கும் மேற்பட்ட பெர்மிட்டுகளை வைத்துக் கொண்டு, போர்ஜ்ட் டாக்குமெண்ட்சை வைத்துக் கொண்டு தமிழகத்தில் ஆம்னி பஸ்களை அதிக அளவில் ஓட்டிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே அத்தகையோர் மீது அரசாங்கம் கடுமையான நடவடிக்கையெடுக்க வேண்டும். போர்ஜ்ட் டாக்குமெண்ட்சை வைத்துக் கொண்டு தவறு இழைப்பவர்களை கடுமையாக தண்டிக்க, சிறையில் தள்ளுவதற்கு ஏற்ற வகையில் சட்டங்களில் திருத்தங்களைச் செய்ய வேண்டும்.

அடுத்தபடியாக 'நேம் ட்ரான்ஸ்பர்' செய்வதில் பல சிக்கல்கள் உருவாகியிருக்கின்றன. உதாரணமாக திருநெல்வேலியில் ரெஜிஸ்டர் செய்த காரை சென்னையில் இருப்பவர் வாங்கினால் 'நேம் ட்ரான்ஸ்பர்' திருநெல்வேலியில தான் செய்ய முடியும், சென்னையில் செய்ய முடியாது என்ற நிலை இருக்கிறது. தமிழகத்தில் எங்கே வண்டி வாங்கினாலும் அந்தந்த மாவட்ட தலைநகரங்களில் 'நேம் ட்ரான்ஸ்பர்' செய்வதற்கு வசதியாக நிலைமையை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து லட்சக்கணக்கில் பணம் செலவழித்து கார், பேருந்து வாங்குபவர்களுக்கு 'ஆர்.சி. புக்' என்ற பெயரில் மஞ்சள் பேப்பரில் ஒரு புத்தகத்தை தருகிறார்கள். முன்பு பைண்ட் செய்யப்பட்ட புத்தகத்தைத் தருவது வழக்கமாக இருந்தது. அந்த வழக்கத்தை திரும்பவும் கொண்டு வர வேண்டும். காரணம் 'ஆர்.சி.புக்' என்பது பல ஆண்டுக்காலம் பாதுகாப்பாக வைத்திருக்கிற டாக்குமெண்ட் ஆகும். ஆகவே இது குறித்து அருள் கூர்ந்து பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து மோட்டார் வாகன வரியாக பல கோடி ரூபாய் அரசுக்கு வருகிறது. அதிலே ஒரு குறிப்பிட்ட சதவீத தொகையை ஒதுக்கி ரோடுகளை செம்மைப்படுத்துவதற்கு இந்த அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டு அமர்கிறேன்.

[1986 மே, 13

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசுக்கு வருவாய் அதிகப்படுத்துவதற்காக சில திருத்தங்களை தமிழ்நாடு மோட்டார் வெகிகிள்ஸ் வரி விதிப்புச் சட்டத்தில் கொண்டு வந்திருக்கிறார்கள். அரசுக்கு வருவாய் அதிகப்படுத்துவதைப் பொறுத்தவரையில் யாருக்கும் கருத்து வேறுபாட்டிற்கு இடமில்லை. இதிலே சில நல்ல அம்சங்களும் இருக்கின்றன. அதே நேரத்தில் தனியார் ஒரு வண்டி, இரண்டு வண்டி தங்களுடைய சொந்த உபயோகத்திற்காக வைத்திருப்பவர்களை பாதிக்கக்கூடிய அளவிற்கு இந்தச் சட்டம் அமையக்கூடும் என்ற அபாயம் இருக்கிறதென்பதை சுட்டிக் காட்ட விரும்புகிறேன். குறிப்பாக,

"Period within which the tax should be paid" என்பதைப் பொறுத்தவரையில் எட்டாவது ஷரத்திலே,

"Provided that in the case of transport vehicles in respect of which temporary permits are granted under the Motor Vehicles Act, the tax due under this Act shall be paid on the date of commencement of the quarter...."

என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே அந்த குவார்ட்டருக்குள்ளே கட்டினால் போதுமென்று இருந்தது. ஒரு மோட்டார் வைத்திருக்கிறவர்களுக்கு சில நேரங்களில் அதைக் கட்டுவதற்கு முடியாமல் போனால் இன்றைக்கு அவர்களை தண்டிப்பதற்கு அல்லது அபராதம் விதிப்பதற்கு வகை செய்யக்கூடிய அளவிற்கு இந்தத் திருத்தம் அமையும் என்று நான் எண்ணுகிறேன்.

அதைப்போலவே இன்னொரு பக்கத்தில் 'ரீபண்ட் ஆப் டாக்சை' பொறுத்தவரையில் செக்ஷன் 11-ல் என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்றால்,

"..application made within such period as may be prescribed.." என்று இருக்கிறது.

(மாலை 5–20)

இன்றைக்கு அந்தக் குறிப்பிட்ட காலத்திற்குப் பிறகு மனு போடுவதற்கான வாய்ப்பு இருக்கிறது. ஆனால் அந்த பீரியடைக் கூட சுருக்கிக் கொள்வதற்கு இடம் கொடுக்கக் கூடாது என்று நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இன்னொரு விஷயத்தைப் பற்றி நான் என்ன சொல்ல விரும்புகிறேன் என்றால், எந்த டாக்ஸ் போட்டாலும் இன்றைக்குக் குறிப்பாக மோட்டாரைப் பொறுத்த வரையிலும், இந்த

[1986 மே, 13 [திரு. ஜே. ஹேமச்சந்திரன்]

டாக்சை இறுதியாக கொடுக்கக் கூடியது, அதை உபயோகப் படுத்தக்கூடிய பாசஞ்சர்களதான். ஆகவே இன்று இப்படிப் பட்ட கன்டிஷன்களை எல்லாம் போட்டு இறுதியாக அதைக் கொடுக்க வேண்டியது பாசஞ்சர்கள்தான். ஆனால் இவர்களுக்கு எந்த அளவிற்கு வசதிகள் செய்யப்பட்டு இருக்கிறது என்பதை யும் நாம் பார்க்க வேண்டும். ஏற்கெனவே இதைப் பற்றி பேசிய மாண்புமிகு உறுப்பினர் இளங்கோவன் அவர்கள் சொன்னதைப் போல, இன்று நம்முடைய பேருந்துகள், அது லாரிகளானாலும் சரி, அல்லது டிரான்ஸ்போர்ட் பஸ்களாக இருந்தாலும் சரி, அவைகள் எல்லாம் எங்கே ஓடுகின்றன என்றால், நம்முடைய ரோடுகளிலே ஓடுகின்றன. அந்த ரோடுகளினுடைய கன்டிஷன் கள் இன்றைக்கு மிக மோசமான நிலைமையில் இருந்து கொண்டு இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூட இந்தப் பேரவையிலே முன்னாலே சில கேள்விகளுக்கு பதில் சொல்லக் கூடிய நேரத்திலே மத்திய அரசு போதுமான நிதி தரவில்லை, ஆகவே ரோடுகளைப் பராமரிக்க முடியவில்லை என்று சொன் னார்கள். நான் இதைக் குற்றச்சாட்டாகச் சொல்ல விரும்ப வில்லை. யதார்த்தமான நிலைமைகளை தான் நான் சொல்கிறேன்.

ஆகவே, இன்று உள்ள ரோடுகளினுடைய கண்டிஷன்களில் இந்தப் பேருந்துகள் ஓடக் கூடிய நேரத்திலே பல பேருந்துகள் பழுது அடைகின்றன. ஆகவே பேருந்துகளை ஓட்ட முடியாத நிலைமையில், அதிகமாக அவைகளை ஒர்க் ஷாப்புக்கு அனுப்ப வேண்டிய நிலைமை ஏற்படுகிறது. ஒர்க் ஷாப்புக்கு போகக் கூடிய நேரத்தில், என்ன ஏற்படுகிறது என்றால், ஒரு மாத காலத்திலே அதை ரிப்பேர் பண்ணி, ரோட்டிலே இறக்கலாம் என்று ஒருவேளை நினைத்தாலும், அது ஒரு மாத காலத்திற் குள்ளாக ரிப்பேர் செய்ய முடியாத நிலைமை ஏற்படுகிறது. நான் இதைச் சொல்வதற்குக் காரணம், அந்தக் குறிப்பிட்ட பீரியடிற்குள்,

" .... such period as may be prescribed ...."

அந்த மனுக்களைக் கொடுத்தாக வேண்டும். அதைப் போன்று அந்த குறிப்பிட்ட காலத்திற்குள்,

" shall be paid at the commencement of the quarter "

கட்டியாக வேண்டும். சில நேரங்களில் பேருந்துகளை,

" commencement of the quarter.... "

ஓட்ட முடியாத நிலைமை ஏற்படுகிறது. ஆகவே அந்த வண் டியை மெயின்டெனன்ஸ் பண்ணி, திருப்பி ரோட்டிலே இறக்கக் கூடிய நேரத்திலே அதையொட்டி, இன்றைக்கு டாக்சை அடைக் கக்கூடிய நிலை இருந்து கொண்டு இருக்கிறது. ஆகவே அப் படிப்பட்ட செதிகளை இன்றைக்கு இந்தச் சட்டத் திருத்தத் தினால் [illegible] ஆப்பரேட்டர்ஸ் பொறுத்த வரையில், அல்லது ஒரு கார், ஒரு பஸ் இதையெல்லாம் வைத்துக் கொண்டு

இருப்பவர்களுக்கு அந்த முறையில் பாதிப்பு ஏற்படாமல் இந்தச் சட்டத்தை அமுல்படுத்த வேண்டும் என்று நான் கேட்டுக் கொள் கிறேன்.

இன்னொரு பக்கத்திலே என்ன சொல்லப்படுகிறது என்றால், இன்றைக்கு இந்த காரண காரிய விளக்கத்திலே, ஆம்னி பஸ் களைப் பொறுத்தவரையில் இன்றைக்கு அதிகமாக அவர்கள் பெர்மிட் வாங்கி திருட்டுத்தனமாக அவர்களால் ஸ்டேஜ் காரியர்ஸ் ஆக ஓட்டப் படுகிறது என்று சொல்லப்படுகிறது. நிச்சயமாக துறையினுடைய உதவி இல்லாமல் எந்த முறையிலும் அதை அனுமதிக்க முடியாது. நான் எதற்கு இதைச் சொல்கிறேன் என்றால், இன்று ஆம்னி பஸ்களைப் பொறுத்த வரையில் எப்படி அந்த விஷயங்கள் நடைபெறுகின்றன என்பதற்கு நான் ஒரு எடுத்துக்காட்டைச் சொல்ல விரும்புகிறேன். நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கூட ஒரு தடவை இதைக் கொண்டு வந்தேன். இன்றைக்கு திருவள்ளுவர் போக்கு வரத்துக் கழகம் சாதாரணமாக ஆர்டினரி பஸ்களை ஓட்டிக் கொண்டிருந்தது, பல ரூட்களிலே. அந்த பஸ்களை எல்லாம் சூப்பர் டீலக்ஸாக மாற்றியதன் காரணமாக ஏறக்குறைய 15 ரூபாய், 20 ரூபாய் அதிகமாகக் கட்டணம் இருப்பதன் காரண மாக இந்த ஆம்னி பஸ்களுக்கு போகக்கூடிய நிலைமை ஏற் பட்டு இருக்கிறது. ஆகவே ஒருவேளை ஆம்னி பஸ்களை ஆத ரிப்பதற்காக வேண்டி ஒரு சில எம்.டி.க்கள் அப்படிப்பட்ட நிலையை எடுத்து இருக்கிறார்களோ என்ற மக்களிடையே ஐயப் பாடு ஏற்பட்டு இருக்கிறது. நான் எதற்கு இதைச் சொல்லு கிறேன் என்றால் இப்படிப்பட்ட நிலை ஏற்பட்டதற்குக் காரண மாக இந்த ஆம்னி பஸ்களை பெர்மிட் வாங்கி, அதை நிரந்தர மான பஸ்களாக அநேகமாக தமிழகத்தினுடைய எல்லாப் பகுதி களிலும் எல்லா முக்கியமான ரூட்களிலும் ஓட்டக் கூடிய நிலைமை ஏற்பட்டு இருக்கிறது. எனவே, இதை நிச்சயமாக தடுக்க வேண் டும். எனவே, இத்தகைய இடங்களில் அதிகமாக அரசினுடைய போக்குவரத்துக் கழகத்தினுடைய பஸ்களை விடுவதற்கு ஏற் பாடுகளைச் செய்ய வேண்டும். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இன்று திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் என்று மட்டுமல்ல, மற்ற போக்குவரத்துக் கழகங்களும், சென்னை நக ரத்திற்கு பஸ்களை விடுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டு இருக் கின்றன. அதேபோன்று அந்தக் கழகங்களுக்கு அதிகமாகப் பேருந்துகளை விட்டு இப்படி '' ஆம்னி '' பஸ்களுடைய பர்மிட் வாங்கி ''Stage Carriages'' நடத்திக் கொள்ளை இலா பம் அடிக்கின்ற அந்த நிலைக்கு முற்றுப்புள்ளி வைப்பதன் மூலம் அரசுக்கு மேலும் அதிகமான வருவாயை ஏற்படுத்துவதற்கு நட வடிக்கை எடுப்பதற்கு இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதேபோன்று ஒரு சிறிய விஷயத்தைக்கூட நான் சுட்டிக் காட்ட விரும்புவது என்னவென்றால், இன்று இது அமுல்படுத்தப்

(திரு. ஜே. ஹேமச்சந்திரன்) [1986 மே 13

படவேண்டுமேயானால், ''எபக்டிவ்-வாக'' இந்த டிபார்ட்மெண்ட் செயலாற்ற வேண்டும். நான் யாரையும் குறை சொல்வதற்காக நான் இதைச் சொல்லவில்லை. ஆனால், நடைமுறையிலே நாம் இன்றைக்கு என்ன பார்க்கிறோம் என்றால், இந்த ஆர்.டி.ஓ. ஆபீஸிலே வேலை செய்கின்ற பல அதிகாரிகள் இப்படிப்பட்ட மோட்டார் கம்பெனிகளுக்கு, இந்தச் சட்டத்திலிருந்து வரியைச் செலுத்துவதிலிருந்து எப்படி எப்படி தப்பித்துக் கொளவதற்கு வழிகளைச் செய்து கொடுக்க முடியுமோ அதற்கு அவர்கள் ஆலோசனைகளை வழங்கக்கூடிய ஒரு நிலையை நம் நாட்டிலே பார்த்துக்கொண்டிருக்கிறோம். நிச்சயமாக அதை எந்த அளவிற்கு கண்காணித்து அதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்க முடியுமோ அந்த முறைகளில் உள்ள நடவடிக்கையைத்தான், இன்று இந்தச் சட்டத்தை தன்னுடைய யதார்த்தமான நோக்கத்துடன் நிறைவேற்றவேண்டுமென்ற முறையிலே விஷயங்களை அமைத்துக்கொள்வதற்கு வழிசெய்யும் என்று நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதேபோன்று, இன்னொரு முக்கியமான விஷயத்தை நான் சுட்டிக்காட்ட விரும்புவது என்னவென்றால் இன்றைக்கு பிரைவேட் பஸ்களைப் பொறுத்த அளவிலே ''டாக்ஸ்'' அவர்களுக்குப் போடப்படுகிறது. அவர்கள் ''டாக்ஸை'' பாசஞ்ஜர்களிடமிருந்துதான் வசூலித்துக் கொடுக்கிறார்கள். அந்த அளவிற்கு வசதிகள் பாசஞ்ஜர்களுக்குச் செய்யப்படுகிறதா? இல்லை. அதைக் கண்காணிக்க வேண்டிய இலாக்கா சரியான முறையிலே கண்காணிப்பதில்லை. இன்று பல இடங்களிலே, அரசு பேருந்துகளும், தனியார் பேருந்துகளும் ஓடக்கூடிய இடங்களில், பல பல ஆர்.டி.ஓ.-க்கள்-எக்ஸாம்பிள் சொல்ல முடியும்—நேரம் இல்லாத காரணத்தினால் நான் அந்த விஷயத்திற்கு வரவில்லை இன்று அரசினுடைய வருவாய் பாதிக்கப்பட்டாலும் பரவாயில்லை, தனியார் பேருந்துகளுக்கு அதிகமான வருவாயை ஏற்படுத்தக் கூடிய முறையில் அவர்கள் அந்த 'டைமிங்ஸ்'-ஸை போட்டுக் கொடுக்கிறார்கள். நான் எதற்கு இதைச் சுட்டிக்காட்டுகிறேன் என்றால், அப்படிப்பட்ட ஒரு எண்ணத்தோடு இன்றைக்கு செயலாற்றக்கூடிய சில அதிகாரிகள்தான் இந்தச் சட்டத்தை அமுல் படுத்த வேண்டியவர்களாக இருந்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அந்த முறையிலே உள்ள நடவடிக்கைகளை எடுக்கக் கூடிய முறையிலே நாம் கடுமையான நடவடிக்கை எடுத்து அரசினுடைய வருவாயை அதிகப்படுத்துவதற்கான நடவடிக்கையில் ஈடுபட வேண்டும்.

ஒரு விஷயத்தைச் சுட்டிக்காட்டி நான் முடித்துக் கொள்கிறேன். பேருந்துகளில் வேலை செய்யக்கூடியவர்கள இருக்கிறார்கள். இந்த ஊழியர்களைப் பொறுத்த அளவில் எந்தவிதமான வசதிகளும் அவர்களின் வேலை நேரத்தைப் பொறுத்த அளவில்கூட கட்டுப்படுத்தக்கூடிய ஒரு நிலைமை இல்லை. Motor Vehicles Act-ஐ பொறுத்த அளவில், இதை அமல்படுத்தக்

கூடிய அதிகாரிகள் என்ற முறையில் ஆர்.டி.ஓ.க்கள் அந்த விஷயத்தைக் கவனிப்பதற்கு பொறுப்புள்ளவர்கள் (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : Taxation Law-லே தொழிலாளர்களைப் பற்றி பேசினால் சரியாக வருமா? சீக்கிரம் முடியுங்கள்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : அதாவது இந்த வருவாய், அவர்கள் இந்த ''டாக்ஸ்''-ஐ கொடுக்க அந்த ''டாக்ஸ்''-ஐ இன்னொரு முறையில் மக்களிடமிருந்து வசூலிக்கிறார்கள். அந்த மக்களுக்கு சேவை செய்யக்கூடியவர்கள் இந்த முதலாளிகள் அல்ல. அந்த ஊழியர்களின் நிலை மிக மோசமான நிலையில் இருந்துகொண்டிருக்கிறது. 12 மணி நேரம்; 18 மணி நேரம் வேலை செய்ய கூடிய ஒரு நிலை இருந்துகொண்டிருக்கிறது. (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ''பில்'' லில் பேசுங்கள். ரெலவண்டாக பேசுங்கள் (குறுக்கீடு).

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : Mr. Deputy Speaker Sir, when we are demanding money from the people we should see that we give them facilities.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நீங்கள் பேசுவதை அந்தந்தத் துறையின் மானியத்தின்மீதுதான் பேச வேண்டும் (குறுக்கீடு).

திரு. ஜே. ஹேமச்சந்திரன் :

அதேபோன்று இன்னொன்று; ரோடுகளைப் பராமரிப்பதற்கு மாண்புமிகு உறுப்பினர் இளங்கோவன் குறிப்பிட்டது போல, மோட்டார் வெகிகில்ஸ் டாக்ஸிலிருந்து ஒரு பகுதியை எல்லா மாவட்டங்களுக்கும் கொடுக்கப்பட வேண்டும். இன்று ரோடுகள் நல்ல முறையிலே இருந்தால்தான் இந்த முறையை சரியான முறையில் அமல்படுத்த முடியும். ஆகவே, அந்த முறையிலே ஒரு திட்டத்தை வகுப்பதற்கு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டு இந்தச் சட்டத்தை ஆதரிக்க வேண்டுமென்று கூறி அமர்கிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கே கொடுக்கப்பட்ட இந்தத் திருத்தங்களை ஆதரித்து மாண்புமிகு உறுப்பினர்கள் இரண்டு பேர்கள் கருத்து தெரிவித்திருக்கிறார்கள். இருந்தாலும் மாண்புமிகு ஹேமச்சந்திரன் அவர்கள் இரண்டு சந்தேகங்களை மட்டும் இங்கே சொல்லியிருக்கிறார்கள்.

[திரு. சு. முத்துசாமி] [1986 மே, 13

(மாலை 5–30)

மற்றபடி அவர்கள் சொல்லியது பொதுவான கருத்து என்றாலும் தனிப்பட்ட முறையில் இந்தத் துறையிலிருந்து அதற்குத் தக்க கவனம் செலுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த கால் ஆண்டு வரியை முதல் தேதியே—தற்காலிக உரிமைப் பெற்றவர்கள் கட்ட வேண்டும் என்று சொல்லுகிறோம். இத் றைக்கு மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தனியாக ஒரு திருத்தம் சுற்றனுப்பப்பட்டிருக்கிறது. அந்த அடிப்படையில் 45 நாட் களுக்குக் குறைவாக யார் யார் இந்த பயணப் பேருந்துகளை இயக்குவதற்கு தற்காலிக அனுமதியை பெறுகிறவர்களோ அவர் கள் முதல் தேதியிலேயே அந்த வரியைக் கட்ட வேண்டும் என்று இந்தத் திருத்தத்தில் வழி வகை செய்து இருக்கிறோம். அதற் குக் காரணம் பல நேரங்களில் 15 நாட்களுக்கு என்று பர்மிட் கொடுக்கிறோம், ஒரு மாதத்திற்கு என்று பர்மிட் கொடுக்கி றோம், இப்படி கொடுக்கிற போது 3 மாதத்திற்கு ஒரு முறை தான் அந்த டாக்ஸ் கட்டப்படுகிறது. அதிலும் ஏறத்தாழ 24 நாட்கள் அந்த டாக்ஸ்க்கு காலம் முடிந்தும் கூட அவர்கள் அந் தப் பணத்தை, வரியைக் கட்டுவதற்கு கால அவகாசம் கொடுக் கப்படுகிறது. அந்தக் கால அவகாசத்தைப் பயன்படுத்திக் கொண்டு அந்த 24 நாட்களுக்கு அந்த வண்டிகளை ஓட்டுகிறார் கள். ஆனால், பின்னால் அந்த டாக்ஸை கட்டாமலேயே அந்த வண்டியை நிறுத்தி விடுகிற நிலைமை ஏற்படுகிறது. எனவே அதைத் தடுக்க வேண்டும் என்பதற்காகத்தான் குறைந்த பட்சம் 45 நாட்களுக்குக் குறைவாக யார் யார் இந்த தற்காலிக அனு மதியை பெறுகிறார்களோ அவர்களிடமிருந்து மட்டும் இந்த டாக்ஸை முதலில் அந்த வரியை கட்டக்கூடிய மாதத்தில் முதல் தேதியில் கட்டப்பட வேண்டும் என்ற அந்த வழிவகையை செய்து இருக்கிறோம். மற்றவர்களுக்கு இதில் எந்தவிதமான பாதிப் பும் இருக்காது. இதிலே மற்ற எந்த சிறிய பேருந்துகளை ஓட்டக் கூடிய சிறிய முதலாளிகளுக்கு இதில் எந்த இடையூறும் வருவ தற்கோ அதேபோல் தனியாருக்கு இதில் எந்த பிரச்சினையும், (நான்-டிரான்ஸ்போர்ட் வெகில்களுக்கு) இதில் எந்த பிரச் சினையும் வருவதற்கோ வாய்ப்பு இல்லை என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். எனவே, இது யாரும் ஏமாற்றி விடாமல் அந்த வரியை வசூல் செய்வதற்கான வழிவகையே ஒழிய எந்தத் தொந்தரவும் இதில் இருக்காது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல் இந்தக் கட்டணவரியை திருப்பிப் பெறுவதற்கு அவர்கள் விண்ணப்பம் கொடுக்க வேண்டும் என்று ஏற்கெனவே நமக்கு இருக்கின்ற சட்டத்தில் வழிவகை இல்லை. நாம் அந்த ஏற்பாட்டை செய்திருக்கிறோம். அதற்கு அந்தப் பணத்தை திருப்பிக் கொடுப்பதற்கான வழிவகை இருந்தாலும் விண்ணப்பங்களுக்கு வேண்டிய அவசியம் அதிலும் இல்லாமல்

இருக்கின்ற காரணத்தால் இப்படி அந்த விண்ணப்பம் கொடுக்கப் பட வேண்டும், அதற்கு ஒரு கால அளவை நிர்ணயம் செய்யப் படும் என்று நாம் சொல்லியிருக்கிறோம். எனவே, இதன் மூலம் வேறு எந்தப் பிரச்சினையும் அவர்களுக்கு ஏற்பட்டு விடுகிற வாய்ப்பு இல்லை. துறையில் ஒரு முறையாக செயல்படுவதற்கு ஒரு வாய்ப்பு ஏற்படுத்த வேண்டும் என்பதற்காகத்தான் இந்த ஏற்பாடு செய்யப்பட்டு இருக்கிறது.

எனவே, மற்றவற்றைப் பொறுத்தவரையில் எந்த பிரச்சினையும் இங்கே எழவில்லை. எனவே, இந்த இரண்டிலேயும் எந்தப் பிரச்சினையும் அந்த வண்டியை வைத்து இருக்கக்கூடிய முதலாளிகளுக்கு ஏற்படாது என்ற உத்திரவாதத்தை இங்கே தந்து இதை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

" தமிழ்நாடு 1986 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரிவிதிப்பு (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 40/1986) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்று, சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற்றது.

பிரிவு-2.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி : " பிரிவு 2 சட்டமுன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப்பெறவேண்டும். "

The Hon. Thiru S. Muthusamy : Sir, I move the following amendment :

In clause 2, in the proposed provise, after the words "Motor Vehicles Act" insert the words "other than stage carriages in respect of which temporary permits are granted for any period exceeding forty five days".

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 2, திருத்தப்பெற்றபடி பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறைவேற்றப்பெற்றது.

1986 மே 13] [திரு. சு. முத்துசாமி]

பிரிவுகள் 3 முதல் 9 வரை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''தமிழ்நாடு 1986 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரி விதிப்பு (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 40/1986), திருத்தப்பெற்றபடி, நிறைவேற்றப்பெற வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன் வடிவு, திருத்தப் பெற்றபடி, நிறைவேற்றப்பெற்றது.

4. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஓ) மது விலக்கு (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு 1986 (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு : 1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்கு (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 41/1986) பேரவையில் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ள ஆளுநர் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்.

7. அரசினர் சட்டமுன்வடிகள்—தொடர்ச்சி.

(ஏஏ) மதுவிலக்கு (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு 1986.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்கு (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 41/1986)@ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்.''

@ 1986 ஆம் ஆண்டு மே 10 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.